**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.118/2022**

**இ.ம.எண்.05/2025**

1) ஆனந்தன் (எ) சதீஷ் **...மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

1) தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர்.

2) வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை.

3) வட்டாட்சியர், குளித்தலை.

4) வருவாய் ஆய்வாளர், குளித்தலை.

5) கிராம நிர்வாக அலுவலர், வைகைநல்லூர் வடக்கு கிராமம்.

6) ராஜகோபால். **...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 07.10.2025ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. N.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. K.S.M.சாகுல் அமீது அவர்கள் முன்னிலையாகியும், 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு. V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1, விதி 10(2)ன் கீழ் மனுதாரர்/வாதியால், மனுவில் கண்ட அவசியத் தரப்பினர்களை மேற்படி வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2) மனுதாரர் மேற்படி வழக்கின் வாதியாவார். மேற்படி வழக்கானது, பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் K.P.ஆறுமுகம் டீ ஸ்டால் என்ற கடையை தாவா சொத்தில் நடத்தி வருகிறார். மேற்படி கடையினை, சுமார் நாற்பது வருட காலத்திற்கு முன்பே 6ம் பிரதிவாதி/எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் இருந்து, மாத வாடகை செலுத்திக்கொண்டு மேற்படி கடையை நடத்தி வருகிறார். 6ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் இறந்த பிறகு 6ம் பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் இம்மனுதாரரிடமிருந்து வாடகை வாங்கி வந்தார்கள்.

3) மனுதாரரின் கடைக்கு தென்புறமாக வருவாய் துறைக்கு பாத்தியப்பட்ட பவுண்ட் சுற்றுச்சுவர் உள்ளது. வருவாய் துறை அதிகாரிகளும், 6ம் பிரதிவாதியும் சேர்ந்து மனுதாரரை தாவா சொத்திலிருந்து சட்ட விரோதமாக வெளியேற்ற முயற்சித்ததால், மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 6ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில், 6ம் பிரதிவாதியின் சகோதரர்களாகிய பாலசுப்ரமணியன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களும், தாவா சொத்திற்கு உரிமையாளர்கள் என்றும் அவர்களை இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

4) மேலும், வருவாய் துறை அதிகாரிகளுடன் குளித்தலை நகராட்சி ஆணையரும், நகராட்சி ஊழியர்களும் தாவா சொத்தை கடந்த ஜனவரி மாதம் 20ம் தேதி கள ஆய்வு மேற்கொண்டு இம்மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாகவும், உடனடியாக கடையை காலி செய்துகொள்ளவேண்டும் என்றும் எச்சரித்து உள்ளனர். தாவா சொத்தை பொறுத்து, ஏற்கெனவே இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து விசாரணை நிலையில் இருந்த விவரத்தை மேற்படி நகராட்சி ஆணையர் மற்றும் ஊழியர்களுக்கு தெரிவித்தும், அவர்கள் மேற்படி வழக்கில் தரப்பினர்களாக இல்லை என்று அவர்களது தரப்பில் தெரிவிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாகம் அதிகார பலமும், ஊழியர்கள் பலமும் இருப்பதால் எந்த நேரத்திலும் தாவா கடையை வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது அப்புறப்படுத்தி விடுவார்கள் என்று அச்சம் உள்ளது.

5) எனவே, 6ம் பிரதிவாதியின் சகோதரர்களும் குளித்தலை நகராட்சி ஆணையரும் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் ஆவார்கள். அவர்களையும் இந்த வழக்கில்

சரியான தீர்வுவழி ஏற்படுத்துவதற்காக பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியமாகும். இல்லாவிட்டால், மனுதாரருக்கு பரிகரிக்க முடியாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே, இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்மனுவுரை ஆட்சேபனையின் சுருக்கம்:**</u>

6) மனுதாரரின் மனு சட்டப்படி செல்லாது, நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு மற்றும் உண்மைக்கு புறம்பானவை. 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில், மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் இந்நீதிமன்றத்தால் எழுவினாக்கள் வனையப்பட்டு அதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணைக்காக பல வாய்தாக்கள் போடப்பட்டுள்ளது.

7) இந்த சூழ்நிலையில், மனுதாரர்/வாதி தரப்பில், கடந்த 04.12.2024ம் தேதி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது. மேற்படி தேதியிலிருந்து 3 வாய்தாக்களுக்கு பிறகு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் 6ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து தாவா சொத்திலிருந்து மனுதாரரை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்ற முற்படுவதாக சொல்வது முற்றிலும் தவறு. அது பொய்யாகும். மேற்படி வழக்கை காலம் கடத்த வேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் எவ்வித முகாந்திரமும் காரணமும் இல்லை. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது.

<u>**6ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1 மற்றும் 2ம் அவசிய தரப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்மனுவுரையின் சுருக்கம்:**</u>

7) மனுதாரர் மனுவில் குறிப்பிட்டு கூறியுள்ள விவரங்கள், மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்க அருகதையல்ல. மனுதாரர் மனுவில் கோரியுள்ள விவரங்கள் அனைத்தும் இந்த எதிர்மனுதாரர்களால் மறுக்கப்படுகிறது. மேற்படி விவரங்களை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

**8)** அசல் வழக்கில் 6ம் பிரதிவாதி, எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது உண்மை. 6ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில், 6ம் பிரதிவாதியின் சகோதரர்களான 1 மற்றும் 2 அவசிய தரப்பினர்கள் மேற்படி வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்று கட்சி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது சரியல்ல. மூன்றாவது அவசிய தரப்பினர் ஒரு அரசு அதிகாரி. அவருக்கும், 1 மற்றும் 2ம் அவசிய தரப்பினர்களுக்கும் எவ்விதமான சம்மந்தமும் கிடையாது. மேற்படி அசல் வழக்கு, கடந்த 04.12.2024ம் தேதி பட்டியலில் போடப்பட்டிருந்த சமயத்தில் அசல் வழக்கின் வாய்தாவை மாற்றிக் கொண்டு எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல் வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் வாதிக்கு நல்ல கட்சி இல்லை என்பது வாதிக்கு தெரியும்.

**9)** மனுதாரரால் தாக்கல் செய்துள்ள மனுப்படி, எந்த பரிகாரமும் கிடைக்காது என்பதை தெரிந்து கொண்டு, வழக்கு நடவடிக்கைகளை காலதாமதம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது.

**<u>3ம் அவசிய தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனுவுரை ஆட்சேபனையின் சுருக்கம்:</u>**

**10)** மனுதாரரின் மனு சட்டப்படி செல்லாது, நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்களின் மனுவில் கண்ட பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு. அதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி வழக்கிற்கு, இம்மனுவில் 3ம் அவசிய தரப்பினராக காண்பிக்கப்பட்டுள்ள குளித்தலை நகராட்சி ஆணையர் அவசிய தரப்பினர் என்று சொல்வது முற்றிலும் தவறு. அதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். இந்த மனுவானது எவ்வித முகாந்திரமும் காரணமும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, செலவுத்தொகையுடன் இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**11)** இம்மனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**12)** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை. இருதரப்பிலும் ஆவண சாட்சியங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**13)** வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மேற்படி வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், மேற்படி வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

**14)** மேலும், மேற்படி வழக்குரைகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர்/வாதி தாவா சொத்தில் டீ கடை நடத்தி வருவதாகவும், தாவா சொத்து 6ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், அவர்களுக்கு முறையாக வாடகை செலுத்தி வருவதாகவும், இந்நிலையில் 6ம் பிரதிவாதி வேண்டுமென்றே மேற்படி டீ கடைக்கு வடபுறம் உள்ள தற்காலிக இரும்பு மாடிப்படியை டீ கடைக்குள் வைக்கவும், டீ கடைக்கு இடைஞ்சல் ஏற்படுத்த முயன்றதாகவும் அதனை வாதி மறுத்துவிட்டதாகவும், இதனால் விரோதம் கொண்ட 6ம் பிரதிவாதி கடையை காலி செய்ய சொல்லி வாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து, அதற்கு வாதியால் பதில் அறிவிப்பும் கொடுக்கப்பட்டு, மேற்படிவிரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு 6ம் பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் சேர்ந்து கொண்டு வருவாய் துறையினரிடம் சென்று தவறான தகவலை தந்து தங்களுடைய ஆள் மற்றும் பணபலத்தை முன்னிறுத்தி கடையை காலி செய்ய எச்சரித்ததாகவும், மேலும் 6ம் பிரதிவாதி, குளித்தலை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருடன் சேர்ந்து, தாவா சொத்தில் வியாபாரம் செய்து கொண்டிருந்த வாதியின் கடைக்குள் நுழைந்து ஒரு வாரத்திற்குள் கடையை காலி செய்யாவிட்டால் போலீஸை வைத்து காலி செய்து விட்டதாக மிரட்டி சென்றுவிட்டதாகவும், 6ம் பிரதிவாதிக்கு அனுகூலமாக வருவாய் துறையினர் செயல்பட்டதாகவும் கூறி மேற்படி வழக்கினை 1

முதல் 6 வரையான எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார்.

**15)** இந்நிலையில், மேற்படி வழக்குரையில் உள்ள சங்கதிகள் அனைத்தும் 1 முதல் 5 வரையான பிரதிவாதிகளால் மறுக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி வழக்கின் 1 முதல் 5 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குளித்தலை நகர புல எண்.37 சுமார் 0.0053 சதுர மீட்டர் பரப்பு கொண்ட இடம் பவுண்ட் இடம் என்றும், மேற்படி நிலம் அரசுக்கு சொந்தமான இடம் என்றும், அதனை பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் சுற்றுச்சுவர் எடுப்பதற்கு ஆய்வு செய்தபொழுது, மேற்படி வாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு டீ கடை நடத்தி வந்த விவரம் தெரியவந்து, மேற்படி 3ம் பிரதிவாதியின் அலுவலகத்திலிருந்து வாதிக்கு சட்டப்படி அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட வாதி பதில் அறிவிப்பை தராமலும், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**16)** மேலும், மேற்படி வழக்கின் 6ம் பிரதிவாதி தரப்பில் வாதியின் வழக்குரை சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்பட்டு இருப்பதுடன், தாவா சொத்து 6ம் பிரதிவாதியின் குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், 6ம் பிரதிவாதியின் பெற்றோர் உயிருடன் இருந்த காலத்தில் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு கிரையம் பெற்ற சொத்தில் தென் கிழக்கு மூலையில் கிழமேல் 10 அடி தென்வடல் 5 அடியுள்ள இடம் வாதிக்கு வாடகை விடப்பட்டதாகவும், 6ம் பிரதிவாதியின் பெற்றோர் இறப்பிற்கு பிறகு வாதி, 6ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்களான பாலசுப்ரமணியன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரிடம் வாடகை செலுத்தி வந்ததாகவும், கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து வாதி ஒழுங்காக வாடகை செலுத்தாமல் இருந்து வந்ததாகவும், 6ம் பிரதிவாதியின் குடும்பத்தார் அவர்களது சொத்தில் மராமத்து பணிகள் செய்வதை வாதி இடைஞ்சல் செய்து வந்ததாகவும், 6ம் பிரதிவாதி குடும்பத்தாரால் வாதிக்கு வாடகைக்கு விடப்பட்ட இடம் அவர்களது குடும்பத்தாருக்கு தேவைப்பட்டதாகவும், அதனால் 6ம் பிரதிவாதியும் அவரது சகோதரர்களும் வாதியிடம் வாடகை விட்ட இடத்தை காலி செய்து சுவாதீனத்தை ஒப்படைக்க கேட்டதாகவும், வாதியின் நடவடிக்கையால் மட்டுமே மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பானது 6ம் பிரதிவாதியும் அவரது சகோதரர்களும் சேர்ந்து அனுப்பியதாகவும், சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம்என்று வாதி 6ம் பிரதிவாதியின்

குடும்பத்தாரிடம் கேட்டுகொண்டதற்கு இணங்க 6ம் பிரதிவாதியின் குடும்பத்தார் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், 6ம் பிரதிவாதி குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை காலி செய்து கொடுக்க கூடாது என்ற எண்ணத்திலும், வாடகை பாக்கியையும் தொடர் வாடகையையும் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்திலும் பொய்யான விவரங்கள் கண்டு மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, 6ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி வழக்கில், எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**17)** இந்நிலையில், மேற்படி வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 06.09.2024 அன்று வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இம்மனுவானது கடந்த 10.02.2025 அன்று வாதியால், மனுவில் கண்ட அவசிய தரப்பினர்களை மேற்படி வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**18)** மேற்படி வழக்கில், 6ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், 6ம் பிரதிவாதிக்கு பாலசுப்ரமணியன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் சகோதரர்கள் என்றும், மேற்படி நபர்கள் தாவா சொத்திற்கு உரிமையாளர்கள் என்றும், அவசிய தரப்பினர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால், அசல் வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது தெரிகிறது. எனவே, மேற்படி 6ம் பிரதிவாதியின் சகோதரர்களான பாலசுப்ரமணியன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் மேற்படி வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும், அவர்களை இம்மனுவில் 1 மற்றும் 2ம் அவசிய தரப்பினர்களாக கூறி இம்மனுவானது மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**19)** மேலும், கடந்த ஜனவரி மாதம் 20ம் தேதி வருவாய் துறை அதிகாரிகளுடன் குளித்தலை நகராட்சி ஆணையரும், நகராட்சி ஊழியர்களும் தாவா சொத்தில கள ஆய்வு மேற்கொண்டு, மனுதாரர் ஏதோ ஆக்கிரமிப்பு செய்திருப்பதாகவும், கடையை காலி செய்துகொள்ளவேண்டும் என்றும் எச்சரித்ததாகவும், தாவா சொத்தைப் பொறுத்து நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு நிலுவையில் இருப்பதைக் கூறியும் அதில் நகராட்சி ஆணையர் மற்றும் ஊழியர்கள் தரப்பினர்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டதாகவும், நகராட்சி நிர்வாகம் அதிகார பலமும், ஊழியர் பலமும் இருப்பதால் எந்நேரத்திலும் தாவா

கடையை வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது அப்புறப்படுத்தி விடுவார்கள் என்ற அச்சத்திலும், மேற்படி நகராட்சி ஆணையரை 3ம் அவசிய தரப்பினராக காண்பித்து இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**20)** மாறாக, 1 முதல் 5 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில், இம்மனுவானது எவ்வித முகாந்திரமும் இல்லாமலும், எவ்வித காரணமும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கை காலம் கடத்த வேண்டி தாக்கல் செய்துள்ளதாகவும் கூறி இம்மனுவை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 6ம் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்தும், இம்மனுவானது மேற்படி அசல் வழக்கின் வாய்தாவை மாற்றிக் கொண்டு எவ்வித முகாந்திரமும் இல்லாமல் மேற்படி வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாக கூறியும், மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் வாதிடப்பட்டது. மேலும், 3ம் அவசிய தரப்பினர் தரப்பிலும், இம்மனுவானது எந்த முகாந்திரமும் இல்லாமலும் காரணமும் இல்லாமலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், 3ம் அவசிய தரப்பினர் மேற்படி வழக்கிற்கு அவசிய தரப்பினர் இல்லை என்றும் கூறி இம்மனுவை தள்ளுபடி செய்திட வாதிடப்பட்டது.

**21)** வழக்கு கோப்புகள் அனைத்தையும் கவனமுடன் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது வாதி மற்றும் பிரதிவாதிகளால் ஒப்புக்கொண்டுள்ளப்படி, மேற்படி வழக்கு 6ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் மனுதாரர்/வாதியானவர் வாடகைதாரராக அனுபவம் செய்து வருவதாகவும் தெரிகிறது. இந்நிலையில், தாவா சொத்தானது, 6ம் பிரதிவாதியின் குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில், மேற்படி வழக்கில் 6ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது 6ம் பிரதிவாதிக்கும் மற்றும் அவரது சகோதரர்களான 1 மற்றும் 2ம் அவசிய தரப்பினர்களுக்கும் பாத்தியப்பட்டதாக கூறியுள்ளார். இதன்மூலம், மேற்படி காரணங்களை கூறி மனுதாரர், 1 மற்றும் 2ம் அவசிய தரப்பினர்களை மேற்படி வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் இல்லை என்றும் கூறி அவர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க கேட்டுக்கொண்டுள்ளார்.

**22)** எனவே, தாவா சொத்தில் 6ம் பிரதிவாதி/எதிர்மனுதாரர் மட்டுமல்லாமல், அவரது சகோதரர்களாகிய 1 மற்றும் 2 ம் அவசிய தரப்பினர்களுக்கும் உரிமை உள்ளது என்பது தெரிகிறது. அதுமட்டுமல்லாமல், மேற்படி 6ம் பிரதிவாதியானவர் தனது எதிர்வழக்குரையில், வாதி ஆரம்பித்ததில் முறையாக 6ம் பிரதிவாதியிடமும் மற்றும் அவரது சகோதரர்களான 1 மற்றும் 2ம் அவசிய தரப்பினர்களிடம் வாடகை செலுத்தி வந்ததாக குறிப்பிட்டு கூறியுள்ளார். இந்நிலையில், தாவா சொத்தைப் பொறுத்து, 1 மற்றும் 2ம் அவசிய தரப்பினர்களுக்கு உரிமைமூலம் இருப்பதால், மேற்படி 1 மற்றும் 2ம் அவசிய தரப்பினர்கள், மேற்படி வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும், மேற்படி வழக்கில் வனையப்பட்டுள்ள எழுவினாக்களை தீர்வு காண்பதற்கும், மேலும் மேற்படி வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பானது, 1 மற்றும் 2ம் அவசிய தரப்பினர்களாக காண்பிக்கப்பட்டுள்ள தாவா சொத்தின் உரிமையாளர்களையும் கட்டுப்படுத்தும் என்பதால், மேற்படி 1, 2 அவசிய தரப்பினர்கள் மேற்படி வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் தான் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**23)** இதுமட்டுமல்லாமல், வருவாய் துறை அதிகாரிகளுடன் நகராட்சி ஆணையரும் நகராட்சி ஊழியர்களும் தாவா சொத்தில், கடந்த ஜனவரி மாதம் 20ம் தேதி கள ஆய்வு மேற்கொண்டு மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாகவும், உடனடியாக கடையை காலி செய்துகொள்ள வேண்டும் என்று எச்சரித்ததாகவும், அதனால் குளித்தலை நகராட்சி ஆணையரும் மேற்படி வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும், அவரையும் பிரதிவாதியாக சேர்க்கவேண்டுமென்று மனுதாரர் தரப்பில் கூறியுள்ள நிலையில், இம்மனுவில் 3ம் அவசிய தரப்பினராக காண்பிக்கப்பட்டுள்ள குளித்தலை நகராட்சி ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரை ஆட்சேபனையில், மேற்படி விவரங்களை குறிப்பிட்டு எதுவும் மறுக்காதபட்சத்தில், மேற்படி 3ம் அவசிய தரப்பினர்க்கு எதிரான வழக்குமூலமானது கடந்த ஜனவரி மாதம் 20ம் தேதி எழுந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**24)** இவ்வாறு இருக்கையில், மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் 3ம் அவசிய தரப்பினர்க்கு எதிராக எழுந்த வழக்குமூலமானது, மேற்படி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் ஏற்பட்டுள்ளது என்பதால், அதனை பொறுத்து பரிகாரம் தேடிக்கொள்ள மனுதாரர்/வாதிக்கு அனைத்து

வகையிலும் சட்டப்படியான அதிகாரம் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், 3ம் அவசிய தரப்பினரின் எதிர்மனுவுரை ஆட்சேபனையில், மனுதாரரின் அனுபவத்தை 3ம் அவசிய தரப்பினர் இடையூறு செய்யவில்லை என்று கூறியுள்ள நிலையில், அதனை மேற்படி வழக்கு விசாரணையில் மட்டுமே 3ம் அவசிய தரப்பினரால் சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதனால், மேற்சொன்ன காரணங்களுக்காக இம்மனுவின் 3ம் அவசிய தரப்பினராகிய குளித்தலை நகராட்சி ஆணையர், மேற்படி வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**25)** எனவே, இம்மனுவில் சேர்க்கப்பட்டுள்ள 1 முதல் 3 வரையான அவசிய தரப்பினர்கள், மேற்படி வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு எடுத்துள்ள நிலையில், மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது, மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**முடிவு:**

முடிவாக, மேற்சொன்ன காரணங்களுக்காக இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. 1 முதல் 3 வரையான அவசிய தரப்பினர்களை, மேற்படி வழக்கின் பிரதிவாதிகளாக சேர்க்க இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2025ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் தேதியாகிய இன்று என்னால் அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2025.10.24 14:43:41 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை**

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2025.10.24 14:43:50 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை**